**MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)**
**+2 Acc Model Qly 2022**
12th Standard
கணக்குப்பதிவியல்

Date : 05-Sep-22

Reg.No. :

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Exam Time : 03:00:00 Hrs Total Marks : 90

## Part A Multiple Choice Question

14 x 1 = 14

1) நிலை அறிக்கை ஒரு
(a) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை (b) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
(c) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு (d) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு

2) 1.4.2010 அன்று பற்பல கடனாளிகள் ரூ.19,500. 31.3.2011 அன்று கடனாளிகள் ரூ.29,900. அவ்வாண்டு கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ.39.6000 எனில், அவ்வாண்டில் கடன் விற்பனை:
(a) ரூ.30,000 (b) ரூ.39,600 (c) ரூ.50,000 (d) ரூ.26,4000

3) பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
(a) வருவாயினத் தன்மை மட்டும் உடையது (b) முதலினத் தன்மை மட்டும் உடையது
(c) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது (d) மேற்கண்ட எதுவுமில்லை

4) நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது
(a) ஒரு சொத்து (b) ஒரு பொறுப்பு (c) ஒரு செலவு (d) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

5) _______ என்பது ஒவ்வொரு உறுப்பினர்களிடமிருந்தும் உறுப்பினராக சேரும்போது ஒரே ஒருமுறை வசூலிக்கப்படும் கட்டணமாகும்.
(a) நுழைவுக் கட்டணம் (b) ஆயுள் உறுப்பினர் கட்டணம் (c) சந்தா (d) உயில்கொடை நிதி

6) கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932 –ன் படி வழங்கப்படும் வட்டி வீதம்
(a) ஆண்டுக்கு 8% (b) ஆண்டுக்கு 12% (c) ஆண்டுக்கு 5% (d) ஆண்டுக்கு 6%

7) ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக
(a) 5.5 மாதங்கள் (b) 6 மாதங்கள் (c) 12 மாதங்கள் (d) 6.5 மாதங்கள்

8) ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாபவிகிதமாக கருதப்படுவது
(a) சராசரி இலாபம் (b) சாதாரண இலாப விகிதம் (c) எதிர்நோக்கும் இலாப விகிதம்
(d) இவைகளில் ஏதுமில்லை

9) மறுமதிபீட்டுக் கணக்கு ஒரு
(a) சொத்து க/கு (b) பெயரளவு க/கு (c) ஆள்சார் க/கு (d) ஆள்சாரா க/கு

10) மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது
(a) ஆதாயம் (b) நட்டம் (c) செலவு (d) இவற்றுள் எதுவுமில்லை

11) கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது
(a) முதல் விகிதம் (b) தியாக விகிதம் (c) ஆதாய விகிதம் (d) இவற்றுள் எதுவுமில்லை

12) கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின்போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது
(a) புதிய இலாபப் பகிர்வு விகிதம் (b) பழைய இலாபப் பகிர்வு விகிதம் (c) ஆதாய விகிதம்
(d) தியாக விகிதம்

13) ஒரு கூட்டாளி விலகலின்போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?
(a) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு
(b) பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு (c) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
(d) மேற்கண்ட எதுவுமில்லை

14) விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
(a) வங்கி க/கு (b) விலகும் கூட்டாளியின் முதல் க/கு (c) விலகும் கூட்டாளியின் கடன் க/கு
(d) பிற கூட்டாளிகளின் முதல் க/கு

## பகுதி - அ - பொருத்துக

1 x 1 = 1

15)

| | |
|---|---|
| a) காப்புகள் | (1) தொழிலாளர் ஈட்டு நிதி |
| b) இலாபங்கள் அல்லது நட்டங்கள் | (2) பெயரளவு கணக்கு |
| c) மறுமதிப்பீட்டுக் கணக்கு | (3) பகிர்ந்து தரா இலாபங்கள் |
| d) புதிய இலாபப் பகிர்வு விகிதம் | (4) ஒப்புக் கொண்ட விகிதம் |

## பகுதி - அ - கூற்று மற்றும் காரணம்

1 x 1 = 1

16) **கூற்று (A):** வருங்காலத்தில் அனைத்து கூட்டாளிகளும் இலாப நட்டங்களை பகிர்ந்து கொள்ளும் விகிதமே புதிய இலாபப் பகிர்வு விகிதம் எனப்படும்
**காரணம் (R):** புதிய இலாபப் பகிர்வு நிர்ணயம் பழைய கூட்டாளி புதிய கூட்டாளிகளிடம் பெறக் கூடிய இலாபப் பங்கினை சார்ந்துள்ளது.
(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.
(ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல
(இ) (A) சரி ஆனால் (R) தவறு
(ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

## பகுதி - அ - பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு

1 x 1 = 1

17) (அ) சராசரி இலாப முறை
(ஆ) உயர் இலாப முறை
(இ) மூலதனமாக்க முறை
(ஈ) நிலை முதல் முறை

**பகுதி - அ - சரியான வாக்கியத்தை காண்க**

1 x 1 = 1

18) 1. கூட்டாண்மையை உருவாக்க குறைந்தபட்சம் இரண்டு நபர்கள் இருக்க வேண்டும்
2. கூட்டாளிகளின் உறவு பரஸ்பரமாக ஏற்படுகிறது
3. கூட்டாண்மை உடன்பாடு சட்டப்படியான தொழில் புரிவதற்காக இருத்தல் வேண்டும்
(அ) 1 மற்றும் 3 சரி
(ஆ) 2 மற்றும் 3 சரி


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(இ) 1,2 மற்றும் 3 சரி
(ஈ) 2 மட்டும் சரி

**பகுதி - அ - தவறான இணையை காண்க** 1 x 1 = 1

19)

| | | |
|---|---|---|
| (அ) | கூட்டாண்மைச் சட்டம் | 1932 |
| (ஆ) | கூட்டாண்மை உறுப்பினர் | கூட்டாளி |
| (இ) | கூட்டாண்மை பொறுப்பு | வரையறு பொறுப்பு |
| (ஈ) | கூட்டாண்மை உறவு முறை | முதல்வர் மற்றும் முகவர் |

**பகுதி - அ - சரியான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) பங்காதாயம் - வருவாயின வரவுகள்
ஆ) அறக்கட்டளை நிதி - வருவாயினச் செலுத்தல்கள்
இ) தொலைபேசிக் கட்டணம் - முதலினச் செலவுகள்
ஈ) முதலீடுகள் - முதலின வரவுகள்

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் கணக்கிடவும்:

| விவரம் | ரூ. |
|---|---|
| ஆண்டு தொடக்கத்தில் முதல் (1 ஏப்ரல், 2016) | 2,00,000 |
| ஆண்டு இறுதியில் முதல் (31 மார்ச், 2017) | 3,50,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 70,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 40,000 |

22) நிலை அறிக்கை என்றால் என்ன?

23) பின்வரும் விவரங்களிலிருந்து 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| சந்தா பெற்றது | ரூ |
|---|---|
| 2015 - 16 - க்காக | 7,500 |
| 2016 –17 - க்கா | 60,00 |
| 2017 – 18 - க்கா | 1,500 |

2016-17 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ரூ 2,400. 2016-2017 ஆம் ஆண்டிற்கான சந்தா 2015-2016 ஆம் ஆண்டில் பெற்றது ரூ 1,000

24) இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

25) மன்னன் மற்றும் இரமேஷ் எனும் கூட்டாளிகள் 3:1 எனும் விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2017, ஏப்ரல் 1 அன்று அவர்களுடைய முதல்: மன்னன் ரூ.80,000, இரமேஷ் ரூ.60,000 மற்றும் அவர்கள் நடப்புக் கணக்குகள் முறையே ரூ.10,000 மற்றும் ரூ.5,000 என வரவிருப்பைக் காட்டியது. 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5% கணக்கிடவும் மற்றும் அதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளையும் தரவும.

26) ஒரு நிறுவனத்தின் கடந்த ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு:
2014: ரூ.4,000; 2015: ரூ.3,000; 2016: ரூ.5,000; 2017: ரூ.4,500 மற்றும் 2018: ரூ.3,500. 5 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

27) வாங்கப்பட்ட நற்பெயர் என்றால் என்ன?

28) மாலா மற்றும் விமலா எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 31.03.2017 அன்று வர்ஷினி என்பவரை கூட்டாளியாக சேர்த்தனர். அவர் சேர்ந்த நாளில் நிறுவன ஏடுகளில் காப்பு நிதி ரூ.50,000 எனக் காட்டியது. காப்புநிதியை பகிர்ந்தளிக்க குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

29) புதிய கூட்டாளி சேர்க்கப்படும் போது, ஏற்கனவே உள்ள நற்பெயரை பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

30) மணி, கனி மற்றும் சோனி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபங்களை 4:5:6 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். மணி என்பவர் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 10 x 3 = 30

31) சாந்தி என்பவரின் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புகள் பின்வருமாறு:

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 | பற்பல கடனீந்தோர் | 25,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 | சரக்கிருப்பு | 45,000 |
| இயந்திரம் | 60,000 | கடனாளிகள் | 70,000 |
| அறைகலன் | 10,000 | ரொக்கம் | 4,000 |

2018, டிசம்பர் 31ஆம் நாளைய நிலை அறிக்கை தயாரித்து அந்நாளைய முதலை கணக்கிடவும்.

32) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்றால் என்ன

33) பின்வரும் விவரங்கள் வேதாரண்யம் விளையாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

| | ரூ |
|---|---|
| மட்டைகள் மற்றும் பந்துகள்தொடக்க இருப்பு | 3,000 |
| அவ்வாண்டில் வாங்கிய மட்டைகள் மற்றும் பந்துகள் | 17,000 |
| பழைய மட்டைகள் மற்றும் பந்துகள் விற்பனை | 2,000 |
| மட்டைகள் மற்றும் பந்துகள் இறுதி இருப்பு | 4,000 |

34) A மற்றும் B வழங்கிய முதல் முறையே ரூ.4,00,000 மற்றும் ரூ.2,00,000. அவர்களின் இலாபப் பகிர்வு விகிதம் 3:2. அவ்வாண்டின் முதல் மீது வட்டி கணக்கிடுவதற்கு முன்னர் இலாபம் ரூ.27,000. பின்வரும் நிலைகளில் முதல் மீதான வட்டித் தொகையைக் கணக்கிடவும்.
(i) முதல் மீது வட்டி குறித்து கூட்டாண்மை ஒப்பாவணத்தில் ஏதும் குறிப்பிடாத போது
(ii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 3 % அனுமதிக்கப்படும் போது
(iii) கூட்டாண்மை ஒப்பாவணத்தின் படி முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5 % அனுமதிக்கும் போது

35) அன்பு என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12 % கணக்கிடப்படுகிறது. 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ரூ. |
|---|---|
| மார்ச் 1 | 6,000 |
| ஜுன் 1 | 4,000 |
| செப்டம்பர் | 5,000 |
| டிசம்பர் 1 | 2,000 |

பெருக்குத் தொகை முறையைப் பயன்படுத்தி எடுப்புகள் மீது வட்டி கணக்கிடவும்.

36) அருள் வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(அ) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 ன் இலாபங்கள் முறையே ரூ.46,000, ரூ.44,000, மற்றும் ரூ.50,000.
(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.5,000 சேர்ந்துள்ளது.
(இ) 2017ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ரூ.10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

37) உயர் இலாப முறையில் நற்பெயர் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

38) ஸ்ரீராம் மற்றும் ராஜ் எனும் கூட்டாளிகள் முறையே 2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 1.4.2017 நெல்சன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்தனர். கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

(i) சரக்கிருப்பு மதிப்பை ரூ.5,000 உயர்த்த வேண்டும்
(ii) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ரூ.7,000 தற்போது பதிவு செய்தல் வேண்டும்.
(iii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ரூ.10,000 குறைக்க வேண்டும்
(iv) கொடுபடாமலுள்ள கூலி ரூ.9,500 க்கு வகை செய்யவேண்டும்.
குறிப்பேடு பதிவுகள் தந்து மறுமதிப்பீடு கணக்கு தயாரிக்கவும்.

39) ஜஸ்டினா, நவி மற்றும் ரித்திகா எனும் கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 31.3.2019 அன்று ரித்திகா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார். முந்தைய ஆண்டுகளின் இலாபம் பின்வருமாறு.
2016: ரூ.5,000; 2017: ரூ.10,000; 2018: ரூ.30,000; 2019 ஆம் ஆண்டிற்கான ரித்திகாவின் இலாபப் பங்கை அவர் விலகும் நாள் வரை பின்வரும் நிலைகளில் கணக்கிடவும்.
(அ) முந்தைய ஆண்டின் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.
(ஆ) கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு இலாபத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.
மேலும், கூட்டாளிகளின் முதல் கணக்கு மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

40) கவின், மதன் மற்றும் ரஞ்சித் என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை முறையே 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று கவின் கூட்டாண்மையை விட்டு விலகுகிறார். விலகலுக்குப்பின் தேவையான சரிக்கட்டுதல்களைச் செய்த பிறகு அவருடைய முதல் கணக்கு ரூ.1,50,000 வரவிருப்பைக் காட்டியது. பின்வரும் நிலைகளில் பதிய வேண்டிய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.
(i) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாக காசோலை மூலம் செலுத்தப் பட்டது.
(ii) விலகும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை.
(iii) ரூ.1,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது, மீதத்தொகை இன்னும் செலுத்தப்பட உள்ளது

**பகுதி - ஈ அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 x 5 = 35

41) a) அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை. 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறியவும்.

| விவரம் | 1.4.2017 ரூ. | 31.3.2018 ரூ. |
|---|---|---|
| வங்கி இருப்பு | 14,000 (வ) | 18,000 (ப) |
| கைரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

அகமது தனது சொந்தப் பயனுக்காக ரூ. 40,000 எடுத்துக்கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்துவதற்காக அவர் ரூ. 16,000 கூடுதல் முதல் கொண்டு வந்தார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

**(OR)**

b) பின்வரும் தகவல்களிலிருந்து, உயர் இலாபத்தினை மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
(அ) சாதாரண இலாப விகிதம் 10%
(ஆ) கடந்த 4 ஆண்டுகளின் இலாபங்கள் ரூ.30,000, ரூ.40,000, ரூ.50,000 மற்றும் ரூ.45,000.
(இ) மேற்குறிப்பிட்ட இலாபம் ரூ.30,000 ல் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
(ஈ) சராசரி பயன்படுத்தப்பட்ட முதல் ரூ.3,00,000.

42) a) ராஜு முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.2018 ரூ. | 31.12.2018 ரூ. |
|---|---|---|
| கைரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டுவந்த கூடுதல் முதல் ரூ. 50,000 மற்றும் அவர் வியாபாரத்திலிருந்து தன்னுடைய சொந்த பயனுக்காக மாதந்தோறும் ரூ. 2,500 எடுத்துக்கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

**(OR)**

b) கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ரூ.30,000; 2017: ரூ.29,000 மற்றும் 2018: ரூ.32,000.
(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.3,000 சேர்ந்துள்ளது.
(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ரூ.2,000 குறைக்கப்பட்டது.
(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ரூ.5,600 என மதிப்பிடப்பட்டது.
3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

43) a) பூம்புகார் இலக்கிய மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்

| விவரம் | ரூ | விவரம் | ரூ |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு (1.4.2018) | 5,000 | சந்தா பெற்றது | 20,000 |
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | 4,000 | பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் | 2,500 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 1,500 | போக்குவரத்துச் செலவுகள் | 2,750 |
| வட்டி செலுத்தியது | 3,250 | புத்தகங்கள் வாங்கியது | 10,000 |
| சிற்றுண்டி வாங்கியது | 1,500 | பல்வகை வரவுகள் | 750 |
| கொடுபட வேண்டிய சம்பளம் | 2,000 | அரசிடமிருந்து பெற்ற மானி | 6,000 |
| அறக்கொடை நிதி பெற்றது | 2,000 | சிற்றுண்டி விற்றது. | 1,500 |
| ஒளியூட்டுக் கட்டணம் | 1,300 | கட்டடம் மீதான தேய்மானம் | 2,000 |
| | | வங்கி ரொக்கம் (31.3.2019) | 2,000 |

**(OR)**

b) ரகு மற்றும் சாம் எனும் கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2017 மார்ச் 31 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | இயந்திரம் | | 30,000 |
| ரகு | 40,000 | | அறைகலன் | | 10,000 |
| சாம் | 30,000 | 70,000 | சரக்கிருப்பு | | 10,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 21,000 | |
| | | | கழிக்க: வாரா | | |
| | | | ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 20,000 |


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| | | | வங்கி | | 30,000 |
| | | 1,00,000 | | | 1,00,000 |

1.4.2017 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு பிரகாஷ் என்பவரை கூட்டான்மையில் சேர்த்தனர்.
(அ) பிரகாஷ் ரூ.10,000 முதல் கொண்டு வருவது
(ஆ) இயந்திரம் ரூ.24,000 என மதிப்பிடப்பட்டது
(இ) அறைகலனின் மதிப்பில் ரூ.3,000 குறைப்பது
(ஈ) வாரா ஐயக்கடன் ஒதுக்கை ரூ.3,000 என அதிகரிப்பப்பது
(உ) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ரூ.1,000 பதிவு செய்தல்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கு மற்றும் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

44) a) சேலம்பொழுதுபோக்கு மன்றத்தின் 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

| பெறுதல்கள் | ரூ | ரூ | செலுத்தல்கள் | ரூ |
|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | அறைகலன் | 15,000 |
| கைரொக்கம் | | 9,000 | எழுதுபொருள்கள் | 2,400 |
| சந்தா | | | முதலீடு | 12,500 |
| 2018 – 2019 | 12,500 | | அஞ்சல் செலவுகள் | 1,000 |
| 2019 – 2020 | 400 | 12,900 | இருப்பு கீ/இ | |
| பொழுதுபோக்குக மூலமாக பெற்ற வருமானம் | | 12,000 | கைரொக்கம் | 3,500 |
| பல்வகை வரவுகள் | | 500 | | |
| | | 34,400 | | 34,400 |

கூடுதல் தகவல்கள்:
(i) மன்றத்தில் 450 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஆண்டு சந்தா ` 30 செலுத்துகின்றனர்.
(ii) எழுதுபொருள்கள் இருப்பு 2018, மார்ச் 31-ல் ரூ300 மற்றும் 2019, மார்ச் 31-ல் ரூ.500.
(iii) 2018, ஏப்ரல் 1 அன்று முதல்நிதி ரூ 9,300 2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான வருவாய் மற்றும் செலவினக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.

**(OR)**

b) அமீர் மற்றும் ராஜா என்ற கூட்டாளிகளின் இலாபப்பகிர்வு விகிதம் 3:2. 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | இயந்திரம் | 60,000 |
| அமீர் | 80,000 | | அறைகலன் | 40,000 |
| இராஜா | 70,000 | 1,50,000 | கடனாளிகள் | 30,000 |
| காப்பு நிதி | | 15,000 | சரக்கிருப்பு | 10,000 |
| கடனீந்தோர் | | 35,000 | முன்கூட்டிச் செலுத்திய காப்பீடு | 40,000 |
| | | | வங்கி ரொக்கம் | 20,000 |
| | | 2,00,000 | | 2,00,000 |

ரோஹித் என்பவர் புதிய கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார். அவர் எதிர்கால இலாபத்தில் தன்னுடைய 1/5 பங்கிற்காக ரூ.30,000 முதலாகக் கொண்டு வந்தார். அவர் நற்பெயரில் தன்னுடைய பங்காக ரூ.10,000 கொண்டு வந்தார்.
மறுமதிப்பீடுப் பின்வருமாறு செய்யப்பட்டது
(i) சரக்கிருப்பின் மதிப்பு ரூ.14,000 ஆக அதிகரிக்கப்பட்டது.
(ii) அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்படவேண்டும்.
(iii) இயந்திரம் மதிப்பு ரூ.80,000 ஆக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.
தேவையான பேரேட்டு கணக்குகள் தயார் செய்து சேர்ப்பிற்கு பின் உள்ள இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

45) a) பின்வரும் தகவல்களிலிருந்து சாந்தி மற்றும் சுமதி என்ற கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல், நிலை முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | சாந்தி ரூ. | சுமதி ரூ. |
|---|---|---|
| 2018, ஜனவரி 1 அன்று முதல் | 1,00,000 | 80,000 |
| 2018, ஜனவரி 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 5,000 | 3,000 |
| 2018, ஜூன் 1 கூடுதல் முதல் கொண்டு வந்தது | 10,000 | 20,000 |
| 2018 ஆம் ஆண்டில் எடுப்புகள் | 20,000 | 13,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| 2018 – ல் இலாபப் பங்கு | 10,000 | 8,000 |
| முதல் மீது வட்டி | 6,300 | 5,400 |
| ஊதியம் | 9,000 | - |
| கழிவு | - | 1,200 |

**(OR)**

b) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கட்டடம் | 80,000 |
| அமல் | 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் | 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்ட க/கு | | 24,000 | வங்கி | 19,000 |
| | | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ.30,000 முதலுடன் எதிர்கால இலாபப்பங்கில் 1/3 விகிதத்தில், பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.
அ) சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5,000 குறைக்கப்பட வேண்டும்.
(ஆ) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3,000 உருவாக்கப்பட வேண்டும்.
(இ) கட்டடம் ரூ.20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.
மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

46) a) ரிச்சர்ட் மற்றும் ரிஸ்வான், 2018, ஜனவரி 1 அன்று முறையே ரூ.3,00,000 மற்றும் ரூ.2,00,000 முதலாகக் கொண்டு தொழில் தொடங்கினர்.
கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி,
(அ) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% தரப்பட வேண்டும்.
(ஆ) ரிஸ்வான் ஆண்டுக்கு ரூ.50,000 ஊதியம் பெற வேண்டும்.
(இ) முதல் மீது வட்டி மற்றும் ரிஸ்வானின் ஊதியத்தை கழித்த பின், கழிவுக்குப் பின் உள்ள இலாபத்தில் 10% ரிச்சர்ட் கழிவாகப் பெற வேண்டும்.
(ஈ) இரு கூட்டாளிகளுக்கு இடையேயான இலாபப் பகிர்வு விகிதம் 3:2.
அவ்வாண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபம் ரூ.3,00,000.
நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் - 31 இல் கணக்கு முடிக்கிறது எனக் கொண்டு இலாபநட்டப் பகிர்வு கணக்கை தயாரிக்கவும்.

**(OR)**

b) அன்பு மற்றும் சங்கர் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 7:5 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2018, மார்ச் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு:


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | கணிப்பொறி | 40,000 |
| அன்பு | 4,00,000 | | வாகனம் | 1,60,000 |
| சங்கர் | 3,00,000 | 7,00,000 | சரக்கிருப்பு | 4,00,000 |
| இலாப நட்ட க/கு | | 1,20,000 | கடனாளிகள் | 3,60,000 |
| கடனீந்தோர் | | 1,20,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | | 60,000 | | |
| | | 10,00,000 | | 1,40,000 |

பின்வரும் விவரங்கள் அடிப்படையில் இராஜேஷ் என்பவர் 1/5 பங்கிற்கு கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார்.
(i) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.75,000 என மதிப்பிடப்பட்டது. இராஜேஷ் நற்பெயரில் தன்னுடைய பங்கினை ரொக்கமாகக் கொண்டு வந்தார்.
(ii) இராஜேஷ் ரூ.1,50,000 முதலாகக் கொண்டு வந்தார்.
(iii) வாகனம் ரூ.2,00,000, சரக்கிருப்பு ரூ.3,80,000, கடனாளிகள் ரூ.3,50,000 என மதிப்பிடப்பட்டது.
(iv) எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் ஈட்டு நிதி மீதான கோரிக்கை ரூ.10,000.
(v) பதிவுறா முதலீடு ரூ.5,000 கணக்கில் கொண்டுவரப்பட்டது.
மறுமதிப்பீடு கணக்கு, முதல் கணக்கு மற்றும் இராஜேஷின் சேர்ப்பிற்கு பின்வரும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

47) a) சீனு மற்றும் சிவா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாபம் மற்றும் நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். சுப்பு என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும்போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.
(i) கட்டடம் மதிப்பினை ரூ.40,000 ஆக உயர்த்த வேண்டும்.
(ii) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ரூ.10,000 மதிப்புள்ள முதலீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்.
(iii) இயந்திரம் மதிப்பு ரூ.14,000 மற்றும் அறைகலன் மதிப்பு ரூ.12,000 குறைக்க வேண்டும்.
(iv) பற்பல கடனீந்தோரில் ரூ.16,000 போக்கெழுத வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் மறு மதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

**(OR)**

b) ஜான், ஜேம்ஸ் மற்றும் இராஜா என்ற கூட்டாளிகள் முறையே சமமாக இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். 31.03.2019 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|---|---|
| முதல் கணக்குகள்: | | | அலவலக சாதனங்கள் | | 70,000 |
| ஜான் | 80,000 | | இயந்திரம் | | 1,40,000 |
| ஜேம்ஸ் | 60,000 | | பற்பல கடனாளிகள் | 52,000 | |
| இராஜா | 1,00,000 | 2,40,000 | கழிக்க: வாரா ஐயக்கடன் ஒதுக்கு | 2,000 | |
| பற்பல கடனீந்தோர் | | 1,20,000 | சரக்கிருப்பு | | 60,000 |
| | | | வங்கி ரொக்கம் | | 40,000 |
| | | 3,60,000 | | | 3,60,000 |

2019, மார்ச் 31 ஆம் நாளன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விளக்கினார்.
i) இயந்திரம் ரூ.1,30,000 ஆக மதிப்பிடுவது
ii) அலுவலக சாதனங்கள் மதிப்பை ரூ. 2,000 குறைப்பது
iii) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3,000 ஆக உயர்த்துவது
iv) ஏடுகளில் பதிவு பெறாமல் உள்ள முதலீடுகள் ரூ.25,000 பதிவு செய்ய வேண்டும்.
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக் கணக்கு தயாரிக்கவும்.

# தனித்து போராடி கரைசேர்ந்த பின் திமிராய் இருப்பதில் தப்பில்லையே

*******************************************


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

# MLWA HSS Madurai (Run by Jain Educational & Empowerment Trust)

**+2 Acc Model Qly 2022**

Date : 04-Sep-22

12th Standard

Reg.No. :

## கணக்குப்பதிவியல்

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Time : 03:00:00 Hrs

Total Marks : 90

**Part A Multiple Choice Question** 14 x 1 = 14

1) (b) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
2) (c) ரூ.50,000
3) (c) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது
4) (a) ஒரு சொத்து
5) (a) நுழைவுக் கட்டணம்
6) (d) ஆண்டுக்கு 6%
7) (b) 6 மாதங்கள்
8) (b) சாதாரண இலாப விகிதம்
9) (b) பெயரளவு க/கு
10) (a) ஆதாயம்
11) (b) தியாக விகிதம்
12) (b) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
13) (c) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
14) (c) விலகும் கூட்டாளியின் கடன் க/கு

## பகுதி - அ - பொருத்துக 1 x 1 = 1

15) a) தொழிலாளர் ஈட்டு நிதி
b) பகிர்ந்து தரா இலாபங்கள்
c) பெயரளவு கணக்கு
d) ஒப்புக் கொண்ட விகிதம்

## பகுதி - அ - கூற்று மற்றும் காரணம் 1 x 1 = 1

16) (இ) (A) சரி ஆனால் (R) தவறு

## பகுதி - அ - பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடு 1 x 1 = 1

17) (ஈ) நிலை முதல் முறை
**காரணம்:** நிலைமுதல் முறையில் கூட்டாளிகளின் முதல் மாறாமல் இருக்கும். மற்ற மூன்று நற்பெயரை கணக்கிடும் முறைகள் ஆகும்.

**பகுதி - அ - சரியான வாக்கியத்தை காண்க** 1 x 1 = 1

18) (அ) 1 மற்றும் 3 சரி

**பகுதி - அ - தவறான இணையை காண்க** 1 x 1 = 1

19) (இ) கூட்டாண்மை பொறுப்பு - வரையறு பொறுப்பு

**பகுதி - அ - சரியான இணையை காண்க** 1 x 1 = 1

20) அ) பங்காதாயம் - வருவாயின வரவுகள்

**பகுதி - ஆ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 30 கட்டாய வினா** 7 x 2 = 14

21) 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான இலாப நட்ட அறிக்கை

| விவரம் | ரூ. |
|---|---|
| இறுதி முதல் (31.3.2017) | 3,50,000 |
| கூட்டுக: அவ்வாண்டின் எடுப்புகள் | 40,000 |
| | 3,90,000 |
| கழிக்க: அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 70,000 |
| சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் | 3,20,000 |
| கழிக்க: தொடக்க முதல் (1.4.2016) | 2,00,000 |
| அவ்வாண்டின் இலாபம் | 1,20,000 |

22) 1) நிலை அறிக்கை என்பது ஒரு குறிப்பிட்ட நாளுக்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இருப்பைக்காட்டும் ஒரு அறிக்கை ஆகும்.
2) சொத்துக்களின் இருப்புகள் வலது பக்கமும் மற்றும் பொறுப்புகளின் இருப்புகள் இடது பக்கத்திலும் காண்பிக்கப்பெறும்.
3) மொத்தச் சொத்துகள் மற்றும் மொத்தப் பொறுப்புகளின் வேறுபாட்டுத் தொகை முதலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

23)

| செலவுகள் | ரூ | வருமானம் | ரூ | ரூ |
|---|---|---|---|---|
| | | சந்தா பெற்றது | 60,000 | |
| | | கூட்டுக: பெறவேண்டிய சந்தா (2016-17) | 2,400 | |
| | | கூட்டுக: 2016-2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா 2015-16 –ல் முன்கூட்டிப் பெற்றது | 1,000 | 63,400 |

மாணவர் குறிப்பு
(i) 2015-16 ஆம் ஆண்டிற்ககான சந்தா ரூ. 7,500 மற்றும் 2017-18 ஆம் ஆண்டிற்கான சந்தா ரூ1,500 நடப்பாண்டிற்குதொடர்டர்புடையது அல்ல. எனவே, அவை வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை.
(ii) நடப்பு ஆண்டு 2016-17-ல் பெறவேண்டிய சந்தா ரூ.2,400. இது 2016-17 ல் பெறப்பட்ட சந்தாவுடன் கூட்டப்பட வேண்டும்.

24)


Kindly send me your Questions & Keys to this email id - padasalai.net@gmail.com - Whatsapp No: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in


1) ஆயுள் உறுப்பினர் கட்டணம்
2) உயில்கொடை
3) அறக்கட்டளை நிதி
4) முதலீடுகள் விற்ற தொகை

25) முதல் மீதான வட்டி கணக்கிடுதல்:
முதல் மீது வட்டி = முதல் தொகை x வட்டி வீதம் x வட்டிக்குரிய காலம்
மன்னன் முதல் மீது வட்டி = 80,000 x 5/100 = ரூ.4,000
இரமேஷ் முதல் மீது வட்டி = 60,000 x 5/100 = ரூ.3,000
குறிப்பு: முதல் மீது வட்டி கணக்கிடும்போது நடப்புக் கணக்கின் இருப்புகளை எடுத்துக் கொள்ளக் கூடாது.

| நாள் | விவரம் | பே.ப.எ. | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|
| 2018 | முதல் மீது வட்டி க/கு ப | | 7,000 | |
| மார்ச் 31 | மன்னன் நடப்பு க/கு | | | 4,000 |
| | இரமேஷ் நடப்பு க/கு | | | 3,000 |
| | (முதல் மீது வட்டி வழங்கியது | | | |
| " | இலாப நட்டப் பகிர்வு க/கு ப | | 7,000 | |
| | முதல் மீதான வட்டி க/கு | | | 7,000 |
| | (முதல் மீது வட்டி கணக்கை முடித்தது | | | |

26) நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

$$\text{சராசரி இலாபம்} = \frac{\text{மொத்த இலாபம்}}{\text{ஆண்டுகளின் எண்ணிக்கை}}$$

$= \frac{4{,}000+3{,}000+5{,}000+4{,}500+3{,}500}{5}$

$= \frac{20{,}000}{5}$

நற்பெயர் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை
= 4,000 × 3 = ரூ.12,000

27) நற்பெயரானது ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால் அது வாங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட நற்பெயர் என்றழைக்கப்படுகிறது

28) குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப.எண் | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2017 மார்ச் 31 | பொதுக்காப்பு க/கு | ப | | 50,000 | |
| | மாலா முதல் க/கு (50,000 x 3/5) | | | | 30,000 |
| | விமலா முதல் க/கு (50,000 x 2/5) (பொதுக்காப்பு பழைய கூட்டாளிகளின் முதல் கணக்குக்கு பழைய இலாபவிகிதத்தில் மாற்றப்பட்டது.) | | | | 20,000 |

29) குறிப்பேட்டுப் பதிவு

| நாள் | விவரம் | | பே.ப. எண்: | பற்று ரூ. | வரவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | கூட்டாளிகள் முதல் / நடப்பு க/கு (பழைய விகிதம்) | ப | | XXX | |
| | நற்பெயர் க/கு (பழைய நற்பெயர் போக்கெழுதியது) | | | | XXX |

30) புதிய இலாப விகிதம், ஆதாயப்பங்கு மற்றும் ஆதாயப் பாங்கு விகிதாச்சாரம் ஆகியவை கொடுக்கப்பட்டதால், புதிய பங்கினைக் கணக்கிடுவதற்கு அவர்களுடைய ஆதாயப்பங்கை பழைய விகிதாச்சாரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, தொடரும் கூட்டாளிகளான கனி மற்றும் சோனி ஆகியோரின் பழைய இலாபப்பகிர்வு விகிதமாகவும் மற்றும் ஆதாய விகிதமாகவும் இருக்கும். அதாவது 5 : 6

**பகுதி - இ ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி மேலும் வினா எண் 40 கட்டாய வினா** 10 x 3 = 30

31) சாந்தி என்பவரின் ஏடுகளில் 2018, டிசம்பர் 31 ஆம் நாளைய நிலை அறிக்கை

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 25,000 | ரொக்கம் | 4,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 4,000 | சரக்கிருப்பு | 45,000 |
| முதல் (இருப்புக் கட்டும் தொகை) | 1,66,000 | கடனாளிகள் | 70,000 |
| | | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 6,000 |
| | | இயந்திரம் | 60,000 |
| | | அறைகலன் | 10,000 |
